வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු

Email : eelanaduweekly@gmail.com
மலர் : 07
05.02.2026 வியாழக்கிழமை
இதழ் : 36
பக்கங்கள் : 08




# கரிநாள் ஆர்ப்பாட்டங்கள் வடக்கு, கிழக்கில் எழுச்சி

## தமிழ் மக்கள் பெருந்திரளாக திரண்டனர்




கிளிநொச்சி, பெப்ரவரி 05

இலங்கையின் சுதந்திர நாள் தமிழருக்கு கரிநாள் என்று தெரிவித்து வடக்கு, கிழக்கில் நேற்று போராட்டங்கள் பெரும் எழுச்சியாக முன்னெடுக்கப்பட்டன. வடக்கில் கிளிநொச்சியிலும் கிழக்கில் மட்டக்களப்பிலும் நடைபெற்ற ஆர்ப்பாட்ட பேரணிகளில் ஆயிரக்கணக்கிலான மக்கள் திரண்டு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் சிங்கள - பௌத்த மயமாக்கப்படுதல், இந்தப் பகுதிகளில்

07

# பிரிவினை, இனவாதத்துக்கு இடமளிக்கமாட்டோம்

## சுதந்திர தின உரையில் ஜனாதிபதி



கொழும்பு, பெப்ரவரி 05

இனவாதம், மதவாதத்தால் எம் வசமுள்ள பலங்களை நாம் சுயமாக அழிப்பதும் பலவீனப்படுத்துவதும்தான் நடக்கிறது என நம்புகிறோம். அதனால் எமது நாட்டில் எந்தவித பிரிவினை, இனவாதத்துக்கு இடமளிக்க மாட்டோம் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம். எமது நாட்டில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கான பிரதான பலத்தை கட்டியெழுப்புவோம் - இவ்வாறு சுதந்திர தின உரையில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் 78ஆவது சுதந்திர தினமான நேற்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் பிரதான நிகழ்வு ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. அங்கு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவரின் நீண்ட உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு,

நாம் சுதந்திரத்துக்கு பின்னர்

07

# புலிகளுக்காக சுதந்திரதினம் கொண்டாடப்பட்டுள்ளதா?

## பொதுஜன பெரமுன சந்தேகம்

கொழும்பு, பெப். 05

நாட்டின் 78ஆவது சுதந்திர தினம் தேசியத்துக்காக கொண்டாடப்பட்டதா அல்லது விடுதலைப் புலிகள், தமிழ் புலம்பெயர் அமைப்புகளுக்காக கொண்டாடப்பட்டதா? என்று சந்தேகம் காணப்படுகிறது. - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சரத் வீரசேகர.

நேற்றைய தினம் கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு

07

# நாட்டின் பொருளாதாரம் ஆபத்தான கட்டத்திலுள்ளது

## பேராயர் மல்கம் ரஞ்சித்



கொழும்பு, பெப். 05

இலங்கை தற்போது மிகவும் ஆபத்தான ஒரு பொரு ளாதார கால கட்டத்தில் உள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளை பின்பற்றினாலும், வறுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வு மற்றும் கடன் சுமையால்

07

# அரசியல் தீர்வு கிடைக்கும்வரை இடைக்கால நிர்வாக பொறிமுறை!

## ஐ. நா. செயலருக்கு மனு

கிளிநொச்சி, பெப். 05

இறுதி அரசியல் தீர்வு கிடைக்கும் வரை சர்வதேச மேற்பார்வையில் இடைக்கால நிர்வாக பொறிமுறையை உருவாக்க வேண்டும் - இவ்வாறு வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு மனு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சுதந்திர நாள் தமிழர்களுக்கு கரிநாள் என்று தெரிவித்து கிளிநொச்சியிலும் மட்டக்களப்பிலும் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டத்தின் நிறைவில் ஐ. நா. செயலாளர் நாயகம், உறுப்பு நாடுகளின் தூதுவர்கள் மற்றும் மனித உரிமைகள் ஆணையாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்ட மனுவிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு,

ஈழத் தமிழர்களின் இனப்பிரச்னைக்கு நிரந்தர அரசியல் தீர்வு எட்டப்படும்வரை, வடக்கு - கிழக்கு தாயகத்தில் அன்றாட விவகாரங்களை நிர்வகிக்க சர்வதேச மேற்பார்வையின் கீழ் இடைக்கால நிர்வாக பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும். அத்துடன் தமிழர் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஆகியவற்றின் அடிப்படையில் எட்டப்படும் எந்த வோர் அரசியல் தீர்வும், சர்வதேசத்தால் கண்காணிக்கப்படும் பொது வாக்கெடுப்பு மூலம்

07

# வடக்கு மாகாண சபையில் சுதந்திரநாள் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 05

78ஆவது சுதந்திர தின விழா வடக்கு மாகாண சபையில் நேற்று கொண்டாடப்பட்டது. கைதடியிலுள்ள அதன் கட்டடத் தொகுதியில் இந்தக் கொண்டாட்டம் நடைபெற்றது.

ஜனாதிபதி செயலகத்தின் விசேட பணிப்புரைக்கமைவாக மாகாண மட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தேசியக் கொடியை ஏற்றினார்.

இதன்போது, யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளால் தமிழ் மொழியிலும் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்களால்

07



# ஏகாதிபத்தியம் வெவ்வேறு வடிவில் இன்றும் முன்னெடுப்பு

## சஜித் பிரேமதாஸ

கொழும்பு, பெப். 05

78ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இந்தத் தருணத்தில், நமது நாட்டைப் பலப்படுத்தி, ஆள்புல ஒருமைப்பாடு, இறையாண்மை, மற்றும் அரசியல் சுதந்திரத்தை பாதுகாக்க இன்று அனைவரும் ஒன்றாய் கூடுகின்றனர். சுதந்திரத்துக்குப் பிறகு, ஒரு நாடாக ஏகாதிபத்தியங்களின் பெரும் சக்தியை தோற்கடித்து, ஐக்கிய நாடாக பலப்பட்டு நிற்கிறோம். அன்று முன்னெடுக்கப்பட்ட ஏகாதிபத்தியம் இன்று வெவ்வேறு கோணங்களில்

07

# புத்தரின் புனித சின்னங்கள் நாட்டுக்கு எடுத்துவரப்பட்டன

கொழும்பு, பெப். 05

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள தேவ்னி மோரி தொல்பொருள் தளத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தரின் புனித சின்னங்கள் நேற்று நாட்டுக்கு கொண்டு வரப்பட்டன.

கொழும்பு கங்காராமை விகாரையில் வைக்கப்பட்டுள்ள இந்த புனித தாதுக்களை பொதுமக்கள் வழிபடுவதற்கான வைபவத்தை நேற்றைய தினம் ஜனாதிபதி அநுர குமார வழிபட்டு ஆரம்பித்து வைத்தார். இந்த புனித தாதுக்களை வரும் 11ஆம் திகதி வரை பொது மக்கள் வழிபட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

# பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்கு இணைப்பதற்கான அரசிதழ் வெளியீடு

கொழும்பு, பெப். 05

தேசிய, மாகாண பாடசாலைகளில் நிலவும் சிங்களம், தமிழ், ஆங்கில மொழி மூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவைக்கு இணைத்துக்கொள்வதற்கான போட்டித் தெரிவு தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அரச சேவையில் உள்ள பட்டதாரிகள், அரச சேவையில் இல்லாத பட்டதாரிகள் என இரு தரப்பினரும் இந்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பிக்க முடியும்.

அரச சேவையில் உள்ள பட்டதாரிகளுக்கான

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரிநாள் போராட்டத்துக்கு ஆதரவாக மல்லாவி நகரம் நேற்று முடங்கியது!

முல்லைத்தீவு, பெப். 05

இலங்கையின் சுதந்திர தினம் தமிழ் மக்களுக்கு கரிநாள் என்று விடுக்கப்பட்ட போராட்டத்துக்கு ஆதரவாக முல்லைத்தீவின் மல்லாவி நகரம் நேற்று முடங்கியது.

கரிநாள் போராட்டத்துக்கு ஆதரவாக நேற்றைய தினம் மல்லாவி நகரின் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் நேற்று மூடப்பட்டன. அத்துடன், நிலையங்களின் முன்பாக கறுப்பு கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. (ஐ)




# நம்பிக்கையை அநுர அரசாங்கம் துரிதமாக கட்டியெழுப்பி வருகிறது

### வடக்கு ஆளுநர் வேதநாயகன்

யாழ்ப்பாணம், பெப். 05

"சுதந்திர தினம் என்பது வடக்கை பொறுத்தவரை கடந்த காலங்களில் ஒரு கரிநாளாகப் பார்க்கப்பட்ட போதிலும், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் "சொற்களை விட செயலே முக்கியம்" என்ற அடிப்படையில் நம்பிக்கையைத் துரிதமாக கட்டியெழுப்பி வருகிறது", என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் 78ஆவது சுதந்திர தின நிகழ்வு நேற்று வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் கைதடியில் நடைபெற்றது. இதில், உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுதந்திர தினம் என்பது வடக்கை பொறுத்தவரை கடந்த காலங்களில் ஒரு கரிநாளாகப் பார்க்கப்பட்ட போதிலும், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தற்போதைய அரசாங்கம் "சொற்களை விட செயலே முக்கியம்" என்ற அடிப்படையில் நம்பிக்கையைத் துரிதமாக கட்டியெழுப்பி வருகிறது. பல தசாப்தங்களாக விடுவிக்கப்படாமல் இருந்த காணிகள் எவ்வித அரசியல் நிபந்தனையுமின்றி உரிமையாளர்களிடம் விடுவிக்கப்படுவது நல்லாட்சிக்கான சிறந்த சான்றாகும். அண்மையில் ஏற்பட்ட "டித்வா" சூறாவளிப் பேரனர்த்தத்தின் போது வடக்கு மாகாண சபைக்குப் போதிய நிதியை மத்திய அரசு உடனடியாக விடுவித்திருந்ததாலும் நாம் தனித்து விடப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

"கடந்த காலங்களில் எமது மாகாணத்துக்கு வந்த பல நல்ல அபிவிருத்தித் திட்டங்களை, அவை மத்திய அரசாங்கத்திடமிருந்து வருகின்றன என்பதற்காகவோ அல்லது அரசியல் காரணங்களுக்காகவோ நாம் எதிர்த்திருக்கிறோம் அல்லது சந்தேகக் கண் கொண்டு பார்த்திருக்கிறோம். "எதிர்ப்பதுதான் அரசியல்" என்ற ஒரு பழமைவாத அரசியல் கலாசாரம் இங்கு வேரூன்றியிருப்பதை நாம் மறுக்க முடியாது.

ஆனால், இந்த மனப்பாங்கு எமது இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாதிப்பதை நாம் சிந்திக்க வேண்டும். அபிவிருத்தி திட்டங்கள் வரும்போது, அவற்றை அரசியல் கண்ணாடி கொண்டு பார்க்காமல், "இதனால் எமது மக்களுக்கு என்ன நன்மை?", "எமது இளைஞர்களுக்கு எவ்வளவு வேலை வாய்ப்பு கிடைக்கும்?" என்ற வளர்ச்சிக்கான கண்ணோட்டத்தில் பார்க்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

உலகம் வேகமாக இயங்கிக் கொண்டிருக்கிறது. நாம் இன்னும் பழைய கோஷங்களை வைத்துக்கொண்டு, வரும் வாய்ப்புகளைத் தட்டிக்கழித்தால், எமது அடுத்த சந்ததி தொழில் தேடி வெளிநாடுகளுக்கும் வெளி மாவட்டங்களுக்கும் செல்லும் நிலை மாறாது. எனவே, மக்களின் நன்மை கருதி வரும் திட்டங்களை அரவணைத்து, அவற்றை வெற்றிபெற செய்வதே விவேகமான அரசியலாகும். ஆக்கபூர்வமான விமர்சனங்கள் தேவை, ஆனால் கண்மூடித்தனமான எதிர்ப்புகள் எமது வளர்ச்சியை நாமே தடுப்பதற்குச் சமமாகும்" - என்றார். (ஐ-03)

## வவுனியா சிறையிலிருந்து நேற்று இருவர் விடுதலை!


வவுனியா, பெப். 05

நாட்டின் 78ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர் விடுதலை செய்யப்பட்டனர்.


78ஆவது சுதந்திர தினமான நேற்று ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர். அபராதம் செலுத்த முடியாத, சிறு குற்றங்களுக்காக கைதாகி தண்டனையின் பாதியை நிறைவு செய்த கைதிகளுமே இவ்வாறு பொது மன்னிப்பில் விடுதலை செய்யப்பட்டனர்.

இதன்படி, வவுனியா சிறையிலிருந்து இருவர் விடுதலை செய்யப்பட்டனர். கைதிகளை விடுவிக்கும் நிகழ்வில் வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர், பிரதான சிறைச்சாலை பிரதானி உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பங்கு பற்றியிருந்தனர். (ஐ-10)



## யாழ். பல்கலைக்கழகத்தில் கறுப்புக்கொடி ஏற்றப்பட்டது



யாழ்ப்பாணம், பெப். 05

நாட்டின் 78ஆவது சுதந்திர தினமான நேற்ற யாழ்ப்பாண பல்கலைக்கழத்தில் கறுப்பு கொடி ஏற்றப்பட்டது.

இலங்கையின் சுதந்திர நாள் தமிழருக்கு கரிநா[illegible] என்று அறிவித்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டதுக்கு அழைப்பு விடுத்திருந்தனர். இதனை பிரதிபலிக்கும் விதமாகவே நேற்றைய தினம் கறுப்புக்கொடி யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் மாணவர்களால் ஏற்றப்பட்டது. (ஐ)

## சுதந்திர தினத்தை முன்னிட்டு பழைய பூங்காவில் சிரமதானம்

யாழ்ப்பாணம், பெப். 05

நாட்டின் 78ஆவது சுதந்திர தினமான நேற்று யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தலைமையில் பழைய பூங்காவில் சிரமதான நிகழ்வு நடைபெற்றது.

இந்தச் சிரமதான நிகழ்வில் மாவட்ட செயலகத்தின் அனைத்துத்தர உத்தியோகத்தர்கள், படையினர், சாரணர்கள், செஞ்சிலுவை சங்கத்தினர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்து கொண்டனர். (ஐ-



## யாழ்ப்பாணத்தில் நேற்று சுதந்திர நாள் பேரணி!

யாழ்ப்பாணம், பெப். 05

சுதந்திர தின கொண்டாட்ட பேரணி நேற்று யாழ்ப்பாணம் - பண்ணை பகுதியில் நடைபெற்றது. மூவின மக்களும் இணைந்ததாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பேரணி பண்ணை சுற்றுவட்டத்தில் ஆரம்பமாகி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தை அடைந்து யாழ்ப்பாணம் பொது நூலகம் முன்பாக நிறைவடைந்தது.

ஐக்கிய இளைஞர் இயக்கத்தின் ஏற்பாட்டில் நாட்டின் 78ஆவது சுதந்திர தினமான நேற்று இந்தப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

நடைபவனியாகவும் வாகன பேரணியாகவும் இந்தப் பேரணி நடைபெற்றது. பேரணியில் பங்கேற்றவர்கள் தேசியக் கொடிகளை ஏந்தியிருந்தனர்.

இந்தப் பேரணியில் சகல மதத் தலைவர்களும் பங்கேற்றிருந்தனர். (ஐ-03)



## இரத்த தான முகாம்

வடமராட்சி, பெப். 05

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் இரத்த வங்கி பிரிவின் வேண்டுகோளுக்கு அமைவாக இராணுவத்தின் 521ஆவது படைப்பிரிவு இரத்த தான முகாம் ஒன்றை நாளை வெள்ளிக்கிழமை நடத்தவுள்ளது.

காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை பருத்தித்துறை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும் இந்த இரத்ததான முகாமில் குருதி கொடை வழங்க ஆர்வமுள்ள சகலரும் பங்கேற்கலாம் என்று படைப்பிரிவின் பொறுப்பதிகாரி மேஜர் டி. பி. விஜயசிறிவர்த்தன கேட்டுள்ளார். (ஐ-02)

## சுதந்திர தினமான நேற்று வவுனியாவில் சமாதான புறாக்கள் பறக்கவிடப்பட்டன

வவுனியா, பெப். 05

நாட்டின் 78ஆவது சதந்திர தினமான நேற்று வவுனியாவில் சமாதானப் புறாக்கள் பறக்கவிடபபட்டன. அத்துடன், தேசிய கொடி தாங்கிய பலூன்களும் பறக்கவிடப்பட்டன.

நல்லிணக்கத்துக்கான இளைஞர் அணியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகரசபை மைதானத்தில் நேற்று இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

முன்னதாக, மூவினங்களையும் சேர்ந்த இளையோர் பேரணியாக மைதானத்தை வந்தடைந்தனர். அங்கு, சமாதனப் புறாக்கள் பறக்கவிடப்பட்டதுடன், தேசியக் கொடி தாங்கிய பலூன்களும் பறக்கவிடப்பட்டன்.

இந்த நிகழ்வில் பங்கேற்ற மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந்த நிழ்வில் மாவட்ட அரச அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேரதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், மதகுருமார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ஐ-05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
05.02.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், தை 22

“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## ராஜபக்ஷ குடும்பத்தின்மீதான விசாரணைகள்

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷ குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளை எதிர்கொண்டிருக்கிறார். இதேபோன்று நாமல் ராஜபக்ஷவும் விசாரணைகளை எதிர்கொண்டிருக்கிறார். இதன் தொடர்ச்சியாக ராஜபக்ஷ குடும்பத்தின் இன்னும் சிலர்மீதும் விசாரணைகள் நடைபெறலாம். இது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான்.

ரணில் விக்கிரமசிங்க கைதும் விசாரணையும் இதற்கான ஒரு முன்னோட்டமாகவே இருந்தது. ரணில்தான் கைவைப்பதற்கு சிக்கலானவர் என்று கருதப்பட்டவர். ஆனால், அவர்மீதே அரசாங் கம் துணிந்து நடவடிக்கை எடுத்தது என்னும் அபிப்பிராயம் சாதாரண மக்கள் மத்தியில் காணப்படுகிறது. இந்தப் பின்னணி யில்தான் ஷிரந்தி ராஜபக்ஷ குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பார்வைக்குள் சென்றிருக்கிறார்.

2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபோது ராஜபக்ஷ குடும்பத்தின் மீதான விசாரணைகளை மேற்கொள்ளப் போவதாக மைத்திரிபால அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது. ஆனால், அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை இறுதியில் மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக அறிவிக்குமளவுக்கு மைத்திரிபால கீழிறங்கினார். இதேபோன்று, ரணில் விக்கிரமசிங்கவும் ராஜபக்ஷ குடும்பத்துக்கு எதிராகத் திரும்பவில்லை. அன்றைய சூழலில் சில நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும் ஆனால், ரணில் அதை விரும்பவில்லை.

ஆனால், பாராளுமன்ற பெரும்பான்மையைக் கொண்டிருக்கும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஊழலை ஒழித்தல் என்னும் வாக்குறுதியை நிறைவேற்ற முயற்சிக்கிறது. ஒருவேளை சம்பந்தப் பட்டவர்களை தண்டிப்பதற்கு போதிய ஆதாரங்கள் இல்லாவிட் டாலும்கூட ராஜபக்ஷ குடும்பத்தின் சக்திவாய்ந்த நபர்கள்மீதான விசாரணை முன்னெடுக்கப்பட்டது என்பதே அரசாங்கத்தை பொறுத்தவரையில் ஓர் அரசியல் வெற்றியாக இருக்கக்கூடும். ஏனெனில், முன்னைய ஆட்சியாளர்கள் அதனை செய்திருக்க வில்லை.

விசாரணைகளுக்கு அஞ்சியே பஸில் ராஜபக்ஷ இன்றுவரையில் நாடு திரும்பாமல் இருக்கிறார். பஸில் உண்மையிலேயே குற்றமற் றவர் என்றால் அவர் நாட்டில் இருந்திருக்க வேண்டும். மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் அவர்கள் நாட்டை எந்த நிலையில் வைத்திருந்தனர் என்பது அனைவரும் அறிந்ததே - ஒரு வகையில் ராஜபக்ஷ காலத்தில் இலங்கை என்பதே அவர்களுடைய குடும்ப நிறுவனம் போன்றே இருந்தது.

நாட்டின் முக்கிய அமைச்சுகள் அனைத்தும் அவர்களுடைய குடும்பத்துக்குள்ளேயே இருந்தன. நாட்டில் என்ன செய்வது என்பதைத் தீர்மானிப்பதற்கு பாராளுமன்றம் தேவையில்லை, அவர்கள் தங்களின் வீட்டில் அமர்ந்து பேசினாலே போதுமானது என்னும் அடிப்படையில்தான் அன்றைய இலங்கை இருந்தது.

தேசிய மக்கள் சக்தியின் அரசியல் எழுச்சியும் வரலாறும் முற்றிலும் வித்தியாசமானது. ஊழல் இல்லாத - இனவாதம் இல்லாத இலங்கை என்பதே அவர்களுடைய நிலைப்பாடாக இருக்கிறது. இந்த இரண்டு நிலைப்பாடும் அடிப்படையில் மக்களால் ஆதரிக்கப்படும் நிலைப்பாடுதான். ஆனால், இந்த விசாரணைகள் ஊடாக சம்பந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்படுவார்களா? அவர்களுடைய சொத்துகள் பறிமுதல் செய்யப்படுமா? அவ்வாறு நிகழ்ந்தால்தான் இந்த விசாரணைகளால் நாடு நன்மையடையும்.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, பெப். 05



இலங்கையின் சுதந்திர நாள் தமிழருக்கு கரிநாளே என்று தெரிவித்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நேற்று வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாக முன்னெடுத்து வரும் போராட்ட பந்தலின் முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள், “1948ஆம் ஆண்டு கிடைத்த சுதந்திரம் எங்களுக்கு விடுதலையாக அமையவில்லை. அது எங்கள் குழந்தைகள் காணாமல் ஆக்கும் ஒரு நீண்ட - இருண்ட பாதையின் தொடக்கமாக மாறியது. நாங்கள் அரசியல்வாதிகள் அல்ல. நாங்கள் சட்ட நிபுணர்கள் அல்ல. நாங்கள் தாய்மார்கள். எங்கள் குழந்தைகளைப் பெற்றவர்கள். அவர்களை வளர்த்தவர்கள். அவர்களை இழந்தவர்கள். இன்று, வவுனியா நகரில், இந்த வன்னிப் பந்தலில் 3ஆயிரத்து 271 நாட்களாக நாங்கள் அமர்ந்திருக்கிறோம். மழையிலும் வெயிலிலும் அரசுகள் மாறினாலும் வாக்குறுதிகள் மாறினாலும் எங்கள் கேள்வி மட்டும் மாறவில்லை.

1948 இல், இலங்கை சுதந்திரம் பெற்றது. ஆனால், அந்த சுதந்திரம் எங்கள் உரிமைகளை பாதுகாக்கவில்லை - எங்கள் மொழியை மதிக்கவில்லை - எங்கள் நிலங்களை காக்கவில்லை - எங்கள் குழந்தைகளை எங்களிடம் திருப்பித் தரவில்லை.

எங்கள் கேள்வி எளிமையானது எங்கள் குழந்தைகள் எங்கே? அவர்கள் எங்கே? யார் பொறுப்பு? எப்போது நீதி? கரிநாள் எங்களுக்கு ஒரு சடங்கு நாள் அல்ல. அது ஒரு நினைவூட்டல். சுதந்திரம் எங்களுக்கு கிடைக்கும் நாள், எங்கள் குழந்தைகளின் உண்மை வெளிவரும் நாளே. இது சுதந்திர தினம் அல்ல இது எங்கள் குழந்தைகள் காணாமல் ஆக்கப்பட்ட கரிநாள்”, என்றனர். (ஐ)

# யாழ். மாவட்ட செயலகத்தில் சுதந்திர நாள் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம், பெப். 05

நாட்டின் 78ஆவது சுதந்திர தினம் அரச அதிபர் ம. பிரதீபன் தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலக முன்றலில் நேற்று கொண்டாடப்பட்டது.


அணிவகுப்பு மரியாதையுடன் ஆரம்பமான நிகழ்வு தேசியக் கொடி ஏற்றல், தேசிய கீதம் இசைத்தல், சர்வ மதத் தலைவர்களின் ஆசியுரை மற்றும் அரசாங்க அதிபரின் உரையுடன் நிறைவு பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, கொக்குவில் இந்துக் கல்லூரி, சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை ஆகிய பாடசாலை மாணவர்களின் பான்ட் வாத்தியக் குழுவின் அணிவகுப்பும், வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி பாடசாலைகளின் தேசிய மாணவர் படையணியின் அணிவகுப்பும், யாழ். இந்துக் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி ஆகிய பாடசாலை மாணவர்களின் சாரணிய அணிவகுப்பு மரியாதையும் நடைபெற்றன.

இந்த அணிவகுப்பில் பங்கேற்ற மாணவர்கள் அரச அதிபரால் கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், மரநடுகை, சிரமதான நிகழ்வுகளும் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பலாலி பாதுகாப்பு படைகளின் தலைமைப்பீடத்தை சேர்ந்த மேஜர் ஜெனரல் ராசிக், பொலிஸ், கடற்படை உள்ளிட்ட உயர் அதிகாரிகள், முப்படை அதிகாரிகள், மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| பெப்ரவரி - 05 | வியாழக்கிழமை |
| விசுவாவசு வருடம் - | தை 22 |
| நல்ல நேரம் : | 10.30 - 12.30 |
| ராகு காலம் : | 01.30 - 03.00 |
| திதி : | சதுர்த்தி |




**மேடம்**
நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகள் வலிய உதவுவார்கள். புதுமை படைக்கும் நாள்.

**இடபம்**
பழைய சிக்கல்களுக்கு தீர்வு காண்பீர்கள். தாய் வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் பங்குதாரர்கள் மதிப்பார்கள். இழந்த சலுகைகளை பெறுவீர்கள். தேவைகள் பூர்த்தியாகும்.

**மிதுனம்**
குடும்பத்தினருடன் கலந்து ஆலோசித்து பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும். தைரியம் கூடும்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய பாதை தெரியும் நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி பெரிய முடிவுகளை எடுக்காதீர்கள். உத்தியோகத்தில் யாரையும் பகைத்துக் கொள்ள வேண்டாம். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டும்.

**கன்னி**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் கோபத்தை காட்டாதீர்கள். அரசு விவரங்களில் அலட்சியம் வேண்டாம். செலவுகள் கட்டுக்கடங்காமல் போகும். பணிகளை போராடி முடிப்பீர்கள். அலைச்சல் பெருகும்.

**துலாம்**
தன்னம்பிக்கையுடன் பொதுகாரியங்களில் ஈடுபடுவீர்கள். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். கோரிக்கைகள் நிறைவேறும். மதிப்புக் கூடும்.

**விருட்சிகம்**
எதையும் தாங்கும் மனவலிமை கிடைக்கும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**தனுசு**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். உறவினர்கள் வீடுதேடி வருவார்கள். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். திருப்பங்கள் நிறைந்த நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் இனந்தெரியாத சின்னச் சின்ன கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும். சக ஊழியர்களுடன் அளவாக பழகுங்கள். திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

**கும்பம்**
மூத்த சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். பழைய கடன் பிரச்சினை தீரும். தாய்வழியில் மதிக்கப்படுவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கு ஏற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தொட்டது துலங்கும் நாள்.

# வாகனத்தில் மாட்டிறைச்சி கடத்திய மூவர் கைதாகி விளக்கமறியலில்

முல்லைத்தீவு, பெப். 05

வெகனர் வானில் மாட்டு இறைச்சியை கடத்திய மூவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்தனர். இவர்களை 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் மக்களின் கால்நடைகளை களவாக பிடித்து இறைச்சியாக்கி விற்பனை செய்யும் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.

இந்த நிலையில், கடந்த திங்கட்கிழமை புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியில் மாடு ஒன்றை களவாடி இறைச்சியாக்கி அதனை வெகனர் வானில் கடத்திச் சென்ற மூவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைதான மூவரும் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ-06)

# வலி. வடக்கில் பனை மரங்கள் படைகளால் அழிக்கப்படுகின்றன

## தவிசாளர் சுகிர்தன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 05

வலி. வடக்கில் இராணுவத்தினரின் பிடியிலுள்ள காணிகளில் உள்ள பனை மரங்கள் அழிக்கப்படுகின்றன என்று வலி. வடக்கு பிரதேச சபை தவிசாளர் சோ. சுகிர்தன் கவலை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை அண்டிய பகுதியில் - இன்னமும் விடுவிக்கப்படாத மக்களின் காணிகளிலுள்ள பனை மரங்களே இவ்வாறு அழிக்கப்படுகின்றன என்றும் அவர் கூறினார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை தமது பிரதேச சபை பணிமனையில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ஐ)

# வடமராட்சி கடற்கரையில் சிரமதானம்

வடமராட்சி, பெப். 05

வடமராட்சி கிழக்கு கடற்கரை பகுதிகள் நேற்று முன்தினம் மருதங்கேணி பொலிஸார் மற்றும் இராணுவத்தினரால் சிரமதானம் மூலம் தூய்மைப் படுத்தப்பட்டது.

இந்த சிரமதான பணிகளுக்கு வடமராட்சி கிழக்கு கடற்றொழில் சங்கங்கள் தமது முழுமையான ஆதரவை வழங்கியிருந்தன.

சிரமதான பணியில் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் யுகதீஸ், வடமராட்சி கிழக்கு சமாச தலைவர் தங்கரூபன் ஆகியோர் பங்கேற்றனர். (ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் புதுக்குடியிருப்பில் ஐவர் கைது

## தடுத்து வைத்து விசாரிக்க உத்தரவு

முல்லைத்தீவு, பெப். 05

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியிலே போதைப் பொருள் பாவனை அதிகரித்து வருகிறது. புதுக்குடியிருப்பு பொலிஸார் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்று மக்களால் தொடர்ச்சியாக குற்றம் சாட்டப்பட்ட நிலையில் முல்லைத்தீவு விசேட போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரால்

புதுக்குடியிருப்பு திப்பிலி பகுதியிலிருந்து ஐஸ் போதைப் பொருளுடன் 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

வெகனார் வாகனம் ஒன்றும் இரண்டு மோட்டார் சைக்கிள்களும் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு பொலிஸார் நேற்று முன்தினம் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது, குறித்த நபர்களிடம் மேலதிக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது என்பதால் இவர்களை பொலிஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி வேண்டும் என்று கோரப்பட்ட நிலையில் ஐவரையும் 06ஆம் திகதி வரை தடுத்து வைத்து விசாரிக்க நீதிபதி உத்தரவிட்டார். (எ)

# வயாவிளான் மாணவர்களின் சாதனை சிலிர்க்க வைக்கிறது

## முன்னாள் அமைச்சர் டக்ளஸ் புகழாரம்

யாழ்ப்பாணம், பெப். 05

சவால்களுக்கு மத்தியிலும் சாதனை படைத்திருக்கின்ற வயாவிளான் மத்திய கல்லூரி மாணவர்களின் தன்னம்பிக்கை பாராட்டப்பட வேண்டியதுடன் சிலிர்க்க வைக்கும் வகையிலும் உள்ளது என்று முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மேலும், விளையாட்டை போன்றே கற்றல் செயல்பாடு உள்ளிட்ட அனைத்து செயல்பாடுகளிலும் மாணவர்கள் ஆர்வமுடன் பங்குபற்றி எதிர்காலத்துக்கான ஆரோக்கியமான பிரஜைகளாக உருவாக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அண்மையில் அநுராதபுரத்தில் இடம்பெற்ற தேசிய மட்டத்திலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 16 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் வயாவிளான் மத்திய கல்லூரி அணி முதலிடம் பெற்றுள்ளது.



குறித்த பாடசாலையில் பல்வேறு வளப்பற்றாக்குறைக்ள் காணப்படுகின்றபோதிலும் தன்னம்பிக்கையுடன் பயிற்சிகளில் ஈடுபட்டு இன்று சாதனை படைத்துள்ள மாணவர்களை பாராட்டியுள்ள டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்தில் சந்தர்ப்பங்கள் கிடைக்கின்ற பட்ஷத்தில் மேலும் கல்லூரியின் தேவைகள் நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துள்ளார். (எ-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணையை பயன்படுத்தி கொழும்பில் ஏமாற்றப்பட்டேன்

## வெளிநாட்டு டிஜிற்றல் படைப்பாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 05

இலங்கைக்கு வந்த முதல் நாளிலேயே கொழும்பில் 15,000 ரூபாய் மதிப்பிலான மோசடிக்கு உள்ளானதாக *"Travel with Balnur"* என அழைக்கப்படும் வெளிநாட்டு டிஜிற்றல் படைப்பாளர் ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

ஜனவரி 15ஆம் திகதி தனது ரிக்ரொக் பக்கத்தில் வெளியிட்ட காணொலியில், கொழும்பு-காலி வீதியில் நடைபயணம் மேற்கொண்டிருந்த போது, ஒருவர் தன்னை மறித்து உதவி கோரியதாக பால்னூர் தெரிவித்தார். குறித்த நபர் தன்னை 55 வயதுடைய "மனோஜ்" என அறிமுகப்படுத்திக் கொண்டதுடன், ஆங்கிலம் பேசத் தெரிந்தாலும் அதிக கல்வி பெறாதவர் எனவும் கூறியுள்ளார்.

அந்த நபர் தனது மனைவி புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இரண்டு மகள்கள் உட்பட குடும்பத்தை நடத்த கடும் சிரமத்தை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவித்ததாக பால்னூர் கூறினார்.

மேலும், பணம் வேண்டாம் எனக் கூறிய அந்த நபர், தனது மனைவிக்காக அதிக புரதம் கொண்ட பால்மாவை வாங்கித் தருமாறு அருகிலுள்ள சுப்பர் மார்க்கெட்டுக்கு அழைத்து சென்றதாகவும் பால்னூர் குறிப்பிட்டார். அங்கு பால்மா, அரிசி, சமையல் எண்ணெய், தேங்காய்ப் பால் மா உள்ளிட்ட பல விலையுயர்ந்த உணவுப் பொருட்களை அவர் தெரிவு செய்துள்ளார்.

"நான் அவருக்கு உதவ விரும்பியதால் எந்த சந்தேகமும் எனக்கு எழவில்லை" எனக் கூறிய பால்னூர், அந்தப் பொருட்களுக்காக சுமார் 15,000 ரூபாய் செலுத்தியதாக தெரிவித்துள்ளார்.

இந்த அனுபவத்தை சமூக ஊடகத்தில் பகிர்ந்த பின்னர், பலரும் அதே நபர் தங்களிடமும் வெவ்வேறு கதைகள் கூறி இதேபோன்று பொருட்களை வாங்கச் செய்ததாக பின்னூட்டம் இட்டதாக பால்னூர் தெரிவித்தார். குறிப்பாக பால்மா போன்ற விலையுயர்ந்த பொருட்களை வாங்கச் செய்து, பின்னர் அவற்றை பணத்துக்காக மீண்டும் விற்பனை செய்வதே இந்த மோசடியின் வழிமுறை என சமூக வலைத்தளப் பயனர்கள் சுட்டிக்காட்டினர்.

"நான் 15,000 ரூபாய் பணத்தை இழந்தேன். ஆனால், அதைவிட மேலாக என் நம்பிக்கையை இழந்துவிட்டேன்" எனத் தெரிவித்த பால்னூர், குறிப்பாக சுற்றுலாப் பயணிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

மேலும், இதுபோன்ற கோரிக்கைகளைத் தவிர்க்கவும் கருணையைப் பயன்படுத்தி நடத்தப்படும் மோசடிகளுக்கு இரையாகாமல் இருக்கவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்தக் காணொலி தற்போது சமூக வலைத்தளங்களில் பரவலாக பகிரப்பட்டு வருவதுடன், கொழும்பில் உள்ளூர் மக்களையும் சுற்றுலாப் பயணிகளையும் குறிவைத்து நடத்தப்படும் மோசடிகள் குறித்த விரிவான விவாதத்தையும் தூண்டியுள்ளது. (எ)

# ஹெரோயினுடன் இருவர் கைது

கொழும்பு, பெப். 05

கிரிபத்கொடையில் சுமார் 3 கிலோ 18 கிராம் ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த சந்தேகநபர் ஒருவரும் போதைப்பொருள் கடத்தலுக்கு உடந்தையாக இருந்த மற்றுமொரு சந்தேகநபரும் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு சந்தேகநபர்களும் மேலதிக விசாரணைகளுக்காக கிரிபத்கொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில், சர்வதேச ரீதியில் இந்தப் போதைப்பொருள் கடத்தலுக்கு தொடர்புகள் உள்ளனவா? என்பது குறித்து கிரிபத்கொடை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# கதிரியக்க தொழில்நுட்ப வல்லுநர்கள் 9 ஆம் திகதி முதல் பணிப்பகிஷ்கரிப்பு

கொழும்பு, பெப். 05

மாளிகாவத்தை சிறுநீரக மருத்துவமனை பிரதிப் பணிப்பாளரின் தன்னிச்சையான நடவடிக்கைகள் தொடர்பில் சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு, குறித்த அதிகாரியைத் தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யுமாறு வலியுறுத்தி எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் அரச கதிரியக்கத் தொழில்நுட்ப வல்லுநர்கள் சங்கம் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே அச்சங்கம் கடந்த மாதம் 21 ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் அடையாளப் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்ததுடன், ஜனவரி 28 ஆம் திகதி முதல் தொடர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவும் தயாராகியிருந்தது.

இந்த நிலையில், சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன, இவ்விடயம் தொடர்பில் கூடிய விரைவில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என உறுதியளித்திருந்தார்.

அத்தோடு, குறித்த மருத்துவரை பதவியிலிருந்து தற்காலிகமாக நீக்குவது தொடர்பில் சுகாதார அமைச்சின் செயலாளருடன் கலந்துரையாட வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனினும், இதுவரை விசாரணைகளின் சுயாதீனத்தை பேணுவதற்காக அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தவறியுள்ளதாக தெரிவித்து, அரச கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் ஏகமனதாக இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக அந்தச் சங்கத்தின் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்தார். (எ)

# முழுமையான சுதந்திரத்தை வென்றெடுக்க இணைவோம்

## சஜித் பிரேமதாஸ சொல்கிறார்



கொழும்பு, பெப். 05

78 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் இந்தத் தருணத்தில், நமது நாட்டைப் பலப்படுத்தி, ஆட்புல ஒருமைப்பாடு, இறையாண்மை மற்றும் அரசியல் சுதந்திரத்தை பாதுகாக்க அனைவரும் ஒன்றாய் கூடுகின்றனர். சுதந்திரத்துக்குப் பிறகு, ஒரு நாடாக ஏகாதிபத்தியங்களின் பெரும் சக்தியை தோற்கடித்து, ஐக்கிய நாடாக பலப்பட்டு நிற்கிறோம். அன்று முன்னெடுக்கப்பட்ட ஏகாதிபத்தியம் இன்று வெவ்வேறு கோணங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

78 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு கொள்ளுப்பிட்டி, பொல்வத்த, சிறீ தர்மகீர்த்தயாராமயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுதந்திர தின வைபவ நிகழ்வில் நேற்றுப் புதன்கிழமை காலை கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் பிரேமதாஸ இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பொருளாதார, சமூக மற்றும் ஏனைய பல துறைகளில் நேரடி ஏகாதிபத்தியத்துக்குப் பதிலாக, நமது நாட்டில் மட்டுமல்ல உலகளாவிய தெற்கு நாடெங்கிலும் மறைமுக ஏகாதிபத்தியம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நமது நாடு முழுமையான சுதந்திர நாடாக மாற வேண்டுமென்றால், இந்த ஏகாதிபத்திய சக்திகள் அனைத்தையும் நாம் தோற்கடித்து, அரசியல், சிவில் மற்றும் குடியியல் சுதந்திரங்கள் போலவே பொருளாதார, சமூக மற்றும் கலாசார சுதந்திரங்களையும் அடைய வேண்டும்.

78 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடும் இந்த நேரத்தில், முழுமையான சுதந்திரத்தை மேலும் அடைந்து கொண்டு, இந்த முற்போக்கான எதிர்கால பயணத்துக்கு அனைவரும் ஒன்றுபடுமாறு அழைப்பு விடுக்கின்றேன்"- என்றார். (எ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளம் யுவதி பாலியல் வன்புணர்வு: சட்டத்தரணிக்கு தொடர்ந்து மறியல்

## விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்த அதிகாரிகளை கைது செய்யுமாறு உத்தரவு

மட்டக்களப்பு, பெப். 05

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசம் ஒன்றில் 24 வயதுடைய இளம் யுவதி ஒருவரை பாலியல் வன்புணர்வு செய்து கர்ப்பமாக்கிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சட்டத்தரணியை எதிர்வரும் 17ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவான் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

மேலும், குறித்த வழக்கின் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்காததாக கூறப்படும் பிரதேச செயலாளர் மற்றும் சேவை நாடும் மகளிர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகிய இருவரையும் கைது செய்யுமாறும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் விசாரணைக் குழு ஒன்றை அமைத்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்குமாறும் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு நீதிவான் கட்டளை பிறப்பித்தார்.

குறித்த பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பிரதேசத்தில் வசித்து, மட்டக்களப்பு நீதிமன்ற கட்டடத் தொகுதியில் சட்டத்தரணியாக கடமையாற்றி வரும் ஒருவர், தனது பிரதேசத்தில் அமைந்துள்ள காரியாலயத்தில் பணியாற்றி வந்த அதே பகுதியைச் சேர்ந்த 24 வயது யுவதி ஒருவருக்கு உணவில் மயக்க மருந்து கலந்து கொடுத்து, பாலியல் வன்புணர்வில் ஈடுபட்டு கர்ப்பமாக்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.


இதனையடுத்து, கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி குறித்த சட்டத்தரணி சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது, அவரை பெப்ரவரி மாதம் 03ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், குறித்த சட்டத்தரணி மீண்டும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது, அவருக்காக சிரேஷ்ட சட்டத்தரணி பிரேம்நாத் தலைமையில் சட்டத்தரணிகள் ஆஜராகினர். வழக்காளி சார்பில் சட்டத்தரணி றிஸ்வி தலைமையிலான சட்டத்தரணிகளான யோகேஸ்வரன், உவைஸ், ரூபி, உதயாகரன், சுதர்சன், கமலதாசன், நஜீபா, ரம்சீயா, தவராசா மற்றும் சசிதரன் ஆகியோர் ஆஜராகி தங்களது சமர்ப்பணங்களை முன்வைத்தனர்.

விசாரணையின் போது, சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர் மற்றும் சேவை நாடும் மகளிர் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் பொலிஸ் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்ததாக பொலிஸார் நீதிவானிடம் தெரிவித்தனர். இதன் காரணமாக விசாரணைகள் முழுமையடையவில்லை என பொலிஸார் அறிவித்தனர்.

இதனையடுத்து, குறித்த சட்டத்தரணியை எதிர்வரும் 17ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதுடன், விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காத அதிகாரிகளை கைது செய்யவும் உயர்மட்ட விசாரணைக் குழு ஒன்றை அமைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவும் கட்டளை பிறப்பித்தார். (எ-01)

# சுதந்திர தின கொண்டாட்டங்கள்




கல்முனை, பெப். 05

78 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய வளாகத்தில் தேசிய கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

தொடர்ந்து நாட்டுக்காக உயிர் நீத்த முப்படையினர் மற்றும் அனைத்துத் தரப்பினரையும் நினைவுகூர்ந்து இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன் கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அசாரின் வழிகாட்டலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்த களுஆராச்சி தலைமையில் மரக்கன்றுகள் பொலிஸ் நிலைய வளாகத்தில் நடப்பட்டன. (எ)

* * *



மட்டக்களப்பு, பெப். 05

மட்டக்களப்பில் தேசிய சுதந்திர தினம் நேற்று காலை கொண்டாடப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையில் தேசிய கொடியேற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டு தேசிய சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.

மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் சிவபாக்கியநாதன் தலைமையில் இந்த தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் மாநகர சபையின் ஆணையாளர் என். தனஞ்சயன், பிரதி ஆணையாளர், மட்டக்களப்பு மாநகர சபையின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது, தேசிய கொடியை மாநகர சபை ஆணையாளரும் மாநகர சபை கொடியை மாநகர முதல்வரும் ஏற்றியதை தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டு தேசிய கொடிக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தேசிய சுதந்திர தின நிகழ்வுகள் நடைபெற்றதுடன் சிறப்புரைகளும் நடைபெற்றன. (எ)

# போதைப்பொருளுடன் கைதான இருவரிடம் மேலதிக விசாரணை

சம்மாந்துறை, பெப். 05

வீடொன்றில் ஐஸ் போதைப் பொருட்களை விற்பனை செய்வதற்காக பொதி செய்த இருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்த சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புறநகர் பகுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் திடீர் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது 3 கிராம் 154 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 18 மற்றும் 34 வயதுடைய இரு நபர்கள் வீடொன்றில் ஐஸ் போதைப் பொருட்களை விற்பனை செய்வதற்காக பொதி செய்த வேளை சம்மாந்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன் சந்தேக நபர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் கூறினர்.

இந்தக் கைது நடவடிக்கையானது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எம்.கே. இப்னு அசார் ஆலோசனைக்கு அமைய சம்மாந்துறை பதில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். பெரேரா வழிகாட்டுதலில் ஊழல் ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மற்றும் பல்வேறு முறைப்பாட்டு பிரிவு பொறுப்பதிகாரியுமான என். ரிபாய்டீன் தலைமையிலான குழுவினரால் முன்னெடுக்கப்பட்டது. (எ-01)

# 9,158 சிப்பாய்களுக்கு தரநிலை உயர்வு

கொழும்பு, பெப். 05

78ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, இராணுவத்தின் நிரந்தர மற்றும் தொண்டர் படைகளின் 9,158 சிப்பாய்களுக்கு அடுத்த நிலை உயர்வுகள் வழங்கப்பட்டன.

சிப்பாய்கள் பிரிவில், அதிகாரவாணையற்ற அதிகாரி – II நிலையிலிருந்து அதிகாரவாணையற்ற அதிகாரி - I ஆம் நிலைக்கு 260 பேரும் அதிகாரவாணையற்ற அதிகாரி – II ஆம் நிலைக்கு 1211 பணிநிலை சார்ஜன்களும் தரம் உயர்த்தப்பட்டனர்.

அத்துடன் பணிநிலை சார்ஜன் நிலைக்கு 1704 சார்ஜன்களும் 2339 கோப்ரல்கள் சார்ஜன் நிலைக்கும் 2204 லான்ஸ் கோப்ரல்கள், கோப்ரல் நிலைக்கும் 1440 சிப்பாய்கள் லான்ஸ் கோப்ரல் நிலைக்கும் நிரந்தர படையணி மற்றும் தொண்டர் படையணிகளில் இருந்து தரம் உயர்த்தப்பட்டுள்ளனர். (எ)

# "சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம்"

கல்முனை, பெப். 05

78ஆவது சுதந்திர தினத்தை பெருமிதத்துடன் கொண்டாடும் இவ்வேளையில், திகாமடுல்ல மாவட்ட மக்களுக்கும் எமது தேசத்தின் அனைத்து பிரஜைகளுக்கும் எனது மனமார்ந்த சுதந்திர தின நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தி இலக்குகளை எமது பிரதேசத்தின் மூலைமுடுக்குகளுக்கெல்லாம் கொண்டு சேர்த்து, பாகுபாடற்ற ஒரு சுபீட்சமான எதிர்காலத்தை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம். பல்லின மக்கள் வாழும் எமது தேசத்தில், வேற்றுமைகளை கடந்து நாம் "இலங்கையர்" என்ற ஒற்றை அடையாளத்துடன் கைகோர்ப்பதே நாம் தாய்நாட்டுக்குச் செய்யும் உண்மையான கௌரவமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ)

# தொழுநோய் சிகிச்சை நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது

மட்டக்களப்பு, பெப். 05

மட்டக்களப்பு மாவட்டம் ஆரையம்பதி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தொழுநோய் சிகிச்சை நிலையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆர். முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தோல் சிகிச்சை மருத்துவ நிபுணர் ரி. தமிழ்வண்ணன், தொழுநோய் மருத்துவ பொறுப்பதிகாரி மருத்துவர் லிபோஜிதா மற்றும் ஏனைய பொறுப்பு மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட பலரும் இதன்போது கலந்து கொண்டனர்.



எதிர்வரும் காலங்களில் நோயாளர் நலன் கருதி வாழைச்சேனை பிரதேசத்திலும் இவ்வாறான சிகிச்சை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. (எ)

# சுதந்திர தினத்தில் மரியாதை வேட்டுகளை தீர்த்த கடற்படை

கொழும்பு, பெப். 05

78ஆவது பெருமைமிக்க தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு, நாட்டுக்கு கௌரவம் செலுத்தும் வகையில் கடற்படையினரால் நேற்று 25 மரியாதை வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

கடற்படை தளபதியின் ஆலோசனையின் பேரில், கொழும்பு காலி முகத்திடலுக்கு அருகில் கடற்பரப்பில் நிலைநிறுத்தப்பட்டிருந்த "இலங்கை கடற்படை கப்பல் சயுர" போர்க் கப்பலில் இருந்து இந்த மரியாதை வேட்டுகள் தீர்க்கப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரிநாள்...

தமிழரை சிறுபான்மையினராக்கும் நோக்கில் திட்டமிட்ட குடியேற்றங்கள், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி, இறுதிப் போரின்போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலைக்கு நீதி, தமிழ் மக்களுக்கான நிலையான அரசியல் தீர்வு என்பவற்றை வலியுறுத்தி கரிநாள் போராட்டத்துக்கு யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் அழைப்பு விடுத்திருந்தனர்.

**கிளிநொச்சியில்...**

வடக்கில் பிரதான ஆர்ப்பாட்டம் கிளிநொச்சியில் நடைபெற்றது. கந்தசுவாமி கோயிலின் முன்பாக ஆரம்பமான போராட்டக்காரர்கள் பசுமை பூங்கா வரை பேரணியாக சென்றனர்.

இதன்போது, போராட்டக்காரர்கள் முள்ளிவாய்க் கால் இனப்படுகொலைக்கான நீதி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி கோரியும் தமிழ் இனப் பிரச்னைக்கான தீர்வு, தமிழர் தாயகப் பரப்பில் திட்ட மிட்ட முறையில் நடைபெறும் நில ஆக்கிரமிப்புக்களை நிறுத்த வேண்டும் என்று கேட்டும் கோஷங்களை எழுப்பினர். அத்துடன், அவை தொடர்பில் வலியுறுத்தும் பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

இதேபோன்று, தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் கொடூரங்களை வெளிப்படுத்தும் வகையிலான காட்சிப் பொருட்களுடனான பேரணியும் நகர்ந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், சிவஞானம் சிறீதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். அத்துடன், பல்கலைக்கழக மாணவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பெருந்திரளானவர்கள் கலந்துகொண்டனர்.

இதேநேரம், போராட்டத்துக்கு ஆதரவாக கிளிநொச்சி நகரில் வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

**மட்டக்களப்பில்...**

கிழக்கில் பிரதான போராட்டம் மட்டக்களப்பில் நடைபெற்றது. கல்லடி பாலத்தில் கூடிய போராட்டக்காரர்கள் தனியார் பேருந்து நிலையத்தில் நிறைவடைந்தது. முன்னதாக காந்தி பூங்காவில் போராட்டத்தை நிறைவுறுத்தத் திட்டமிட்டிருந்த நிலையில் அதற்கு பொலிஸார் தடை விதித்திருந்தனர். சுதந்திர தின கொண்டாட்டம் அங்கு நடைபெறுவதால் அங்கு போராட்டத்தை நிறைவு செய்வது வீண் குழப்பங்களை ஏற்படுத்தும் என்று பொலிஸார் வலியுறுத்தினர். இதைத் தொடர்ந்தே போராட்டம் நிறைவுறும் இடம் மாற்றப்பட்டது. அத்துடன், பேரணி மட்டக்களப்பு நகரம் ஊடாக செல்லவும் பொலிஸார் அனுமதிக்கவில்லை. இதனால் பொலிஸாருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டு தள்ளுப்பாடுவரை சென்றிருந்தது. இதைத் தொடர்ந்து போராட்டம் வெள்ளைப்பாலம் அருகே நிறைவு செய்யப்பட்டது.

மட்டக்களப்பில் போராட்டத்துக்கு பெருமளவில் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். இந்தப் போராட்டத்தில் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள், காணால் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பல தரப்பினர் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை, கரிநாள் போராட்டங்களுக்கு ஆதரவாக முல்லைத்தீவின் மல்லாவி நகரில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கறுப்பு கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. இதுதைவிர, வடக்கு, கிழக்கின் பல இடங்களிலும் கறுப்பு கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. (ஐ)

## பிரிவினை...

78 வருடங்கள் பயணித்துள்ளோம். ஆனால், எமது சுதந்திரத்தின் மிக முக்கியமான பணி சுதந்திரம் முழுமையடைவது நாம் எந்தளவு பொருளாதார ரீதியில் எந்தளவு சுதந்திரம் பெறுகிறோம் என்ற காரணியின் அடிப்படையிலேயே. பூரணமான சுதந்திரம் தொடர்பான போராட்டம் இன்னும் இருப்பதாக நான் கருதுகிறேன். இந்த வருட சுதந்திர தினத்தின் தொனிப்பொருள் "இலங்கையை கட்டியெழுப்புவோம் " என்பதாகும். நாம் இலங்கையின் சுயாதீனத்தன்மை, இறைமை, எமது சுதந்திரம் ஆகிய மும்மூர்த்தியின் மேல் மீண்டும் நிலைநிறுத்த வேண்டும். மீளக் கட்டியெழுப்ப வேண்டும்.

எமது தாய்நாட்டை கட்டியெழுப்புகையில் வரலாற்றால் வழங்கியுள்ள முக்கிய தாற்பரியத்தை இந்த பூமியில் மீளஸ்தாபிப்பதற்கான பாதையே நாம் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான பாதையாக தெரிவு செய்யப்படும். அது வெறுமனே தாய்நாட்டின் வேர்களை அழிக்கும் தேசத்தின் சாரத்தை ஒழிக்கும் பொருளாதார மார்க்கமல்ல. எமது தாய்நாட்டினதும் எமது தேசத்தினதும் அடிப்படையில் கட்டியெழுப்பப்படும் நவீன இலங்கையொன்றை கட்டியெழுப்பும் பாதைக்கு நாம் பிரவேசிக்க வேண்டும்.

எமது நாட்டை கட்டியெழுப்புவதற்கான திடஉறுதிக்கு வருவோமானால் எமது மனிதவளம் உலகில் உள்ள எந்தவொரு தேசத்துடனும் போட்டிபோடக் கூடிய சகல வகையிலும் பூரணத்துவமான மனித வளமாக மாற்றியமைக்க வேண்டும். அறியாமைக்குப் பதிலாக அறிவையும் பழைய பாதகங்களுக்கு பதிலாக முன்னேற்றத்தையும் பிரிவினைக்குப் பதிலாக ஒற்றுமையையும் அடிப்படையாகக் கொண்ட நவீன மனித வளத்தை உருவாக்க வேண்டும்.

எமது நாட்டில் முன்னேற்றகரமான மனித வளத்தை எதனால் கட்டியெழுப்பப்போகிறோம். அறிவு, கருணை, நவீன தொழில்நுட்பத்தை இணைத்துக் கொள்வதன் ஊடாக மேன்மையான மனித வளத்தை உருவாக்க வேண்டும். அதனை உருவாக்குவதற்கு எமது கல்வித்துறையில் பெரும் பரிமாற்ற யுகத்தை ஆரம்பிக்க வேண்டும். நாம் அதற்குத் தயாராக இருக்கிறோம்.

இலங்கையென்பது பல்வேறு மதத்தவர்கள் வாழும் நாடு. தமக்கே தனித்துவமான கலாசாரங்களை கொண்ட மக்கள் உள்ளனர். அதே போன்று பிரதானமாக இரு மொழிகளை தமது தாய்மொழியாகக் கொண்ட மக்கள் வாழ்கின்றனர். நம்பிக்கைகள், கலாசாரங்கள், வழிபாடுகளில் வேறுபாடு உள்ளன. நாம் எங்கு நோக்கிச் செல்ல வேண்டும்? இந்த மாற்றங்களை மோதலுக்காக பயன்படுத்தலாம். இந்த மாற்றங்களை மற்றவர்களுக்கு எதிரான ஆயுதமாக உயர்த்திப் பிடிக்க முடியும். ஆனால் அவை எமது பலத்தை பலவீனப்படுத்திவிடும்.

எமது அபிலாசை எது. இந்த வேறுபாடுகளை மதித்து ஒவ்வொரு இனக்குழுக்களின் தனித்துவத்தை அங்கீகரித்து இலங்கையராக சிந்திக்கக்கூடிய புதிய மாற்றத்துக்கான யுகம் எமக்கு அவசியம். எமது அகராதியில் இருக்கும் மிகவும் அசிங்கமான இரு வசனங்கள் எவை? இனவாதம் மற்றும் மதவாதம் தான் அவை. அதனால் இனவாதம், மதவாதத்தால் எம் வசமுள்ள பலங்களை நாம் சுயமாக அழிப்பதும் பலவீனப்படுத்துவதும்தான் நடக்கிறது என நம்புகிறோம். அதனால் எமது நாட்டில் எந்த வித பிரிவினைக்கு, இனவாதத்துக்கு இடமளிக்க மாட்டோம் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம். எமது நாட்டில் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கான பிரதான பலத்தை கட்டியெழுப்புவோம் என்பதை எமது நாட்டு மக்களுக்கு அறிவிக்கிறோம்.

இந்நாட்டைக் கட்டியெழுப்புவது என்பது எமது பிரதான வளமான மனித வளத்தின் தோள்களில் சுமத்தப்பட வேண்டிய ஒரு பணியாகும். அதற்கான கலந்துரையாடல்களையும் வேலைத்திட்டங்களையும் நாம் ஆரம்பித்துள்ளோம். எமது பழமையான வரலாற்று மரபுகள், எமது அனுபவங்கள் என அனைத்தையும் ஒன்றிணைத்து இந்த இலங்கையை கட்டியெழுப்ப முடியும் - என்றார். (ஐ)

## புலிகளுக்காக...

கூறினார்.

மேலும், நாட்டின் ஒற்றையாட்சிக்கு எதிராகவே விடுதலைப் புலிகள் அமைப்பினர் ஆயுதமேந்தி போராடினார்கள். 30 ஆண்டுகால போராட்டத்தின் பின்னர் 29 ஆயிரம் இராணுவத்தினர் தமது உயிரைத் தியாகம் செய்து நாட்டை பாதுகாத்தனர். 2009 ஆம் ஆண்டு விடுதலை புலிகள் அமைப்பு தோற்கடிக்கப்பட்டு நாடு இரண்டாவது தடவையாக சுதந்திரமடைந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இராணுவத்தினருக்கும் தேசியத்துக்கும் முன்னுரிமை வழங்கி நாட்டை ஆட்சி செய்தார். ஆனால், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்காகவே செயல்படுகிறார்.

78 ஆவது சுதந்திர தினம் தேசியத்துக்காக கொண்டாடப்பட்டதா அல்லது விடுதலை புலிகளின் புலம்பெயர் அமைப்புகளுக்காகக் கொண்டாடப்பட்டதா என்ற சந்தேகம் காணப்படுகிறது.

2009 ஆம் ஆண்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தபோது பயன்படுத்தப்பட்ட பீரங்கிகள், மற்றும் போர் வாகனங்கள் சுதந்திர தினத்தில் காட்சிப்படுத்தப்படவில்லை. யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த இராணுவத்தினர் பெருமைப்படுத்தப்படவில்லை. அரசாங்கம் இராணுவத்துக்கு எதிராகவே செயல்படுகிறது. இதற்கு பெரும்பான்மையின மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

## வடக்கு...

சிங்கள மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அத்துடன், தொடர்ந்து நாட்டுக்காக உயிர்நீத்தவர்களுக்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் மேலைத்தேய வாத்திய இசை முழக்கம், தேசிய மாணவர் படையணியின் அணிவகுப்பு , கலாசார நிகழ்வுகள் விழாவை அலங்கரித்தன.

இந்தக் கொண்டாட்டத்தில் சர்வமதத் தலைவர்கள், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தின் துணைத்தூதுவர் சாய் முரளி, யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் கே. ரி. பி. டி. சில்வா, வன்னி படைகளின் கட்டளைத் தளபதி, கடற்படையின் வட பிராந்திய கட்டளைத் தளபதி, வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (ஐ)

## நாட்டின்...

மக்கள் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர். அர சியல் தலைவர்கள் எத்தனை வாக்குறுதிகளை வழங்கினாலும் நாட்டின் அடித்தளம் இன்னும் பலவீனமாகவே உள்ளது என்று பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

நாட்டின் 78ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கத்தோலிக்க ஆராதனைகள் பொரளை அனைத்து புனிதர்கள் தேவாலயத்தில் நடைபெற்றது. இங்கு, உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1948இல் நாம் செய்தது வெளிநாட்டுத் தலைமையிடமிருந்து அதிகாரத்தை இலங்கையர்களிடம் ஒப்படைத்தது மட்டுமே. ஆனால், வெளிநாட்டு ஆதிக்கத்தின் சட்டங்கள், மரபுகள் மற்றும் பொருளாதாரப் பாதையே இன்றும் தொடர்கின்றன. சுதந்திரத்துக்கு பிறகு அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் உலகமயமாக்கல் ஆகியவை நமது உள்நாட்டு உற்பத்தி முறையை முழுமையாகச் சீர்குலைத்துவிட்டன.

அன்று அநேகமானவற்றில் தன்னிறைவு பெற்றிருந்த நாம், இன்று ஒரு சிறிய ஊசி முதல் கப்பல்கள் வரை அனைத்தையும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம் - என்றார். (ஐ)

## அரசியல்...

உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

முள்ளிவாய்க்கால் சம்பவம் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரங்களுக்குச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ. சி. சி. ) அல்லது சர்வதேச நீதிமன்றம் (ஐ. சி. ஜே.) ஊடாகப் பரிகார நீதி வழங்கப்பட வேண்டும்.

பயங்கரவாத தடைச் சட்டம் மற்றும் நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் ஆகியவற்றை நீக்க வேண்டும், தொல்பொருள், வனவளத் திணைக்களம் மற்றும் மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் முன்னெடுக்கப்படும் நில அபகரிப்புகள் நிறுத்தப்பட வேண்டும், திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்கள், பௌத்தமயமாக்கல் செயல்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும், தமிழர் தாயகப் பகுதிகளில் ஆக்கிரமித்து நிற்கும் இராணுவம் வெளியேற வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக சர்வதேச விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும்.

ஊடகவியலாளர்கள், மாணவர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் மீதான கைதுகள் மற்றும் அச்சுறுத்தல்கள் நிறுத்தப்பட வேண்டும், தமிழ் மக்களின் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு ஏற்படுத்தப்படும் தடைகள் நீக்கப்பட வேண்டும், தாயகத்தின் இயற்கை வளங்கள் சூறையாடப்படுவது தடுக்கப்பட வேண்டும், சர்வதேச மேற்பார்வையில் மனிதப் புதைகுழிகள் அகழப்பட்டு நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும்.

1833ஆம் ஆண்டு கோல்புறூக் ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு முன்னதாக தமிழர்களும் சிங்களவர்களும் தனித்தனி இராச்சியங்களாகவே நிர்வகிக்கப்பட் டனர் என்ற வரலாற்று உண்மையை சிங்கள தேசம் ஏற்க வேண்டும் - என்று அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)

## பட்டதாரிகளை...

இணையவழி விண்ணப்ப முறைமை இன்று முற்பகல் 9.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், பெப்ரவரி 19 ஆம் திகதி இரவு 9.00 மணி வரை விண்ணப்பிக்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அரச சேவையில் இல்லாத பட்டதாரிகள் இருபாலாரும் விண்ணப்பிக்கக்கூடிய இந்தச் சந்தர்ப்பத்துக்கான இணையவழி முறைமை பெப்ரவரி 20 ஆம் திகதி முற்பகல் 9.00 மணிக்கு ஆரம்பமாகி, மார்ச் 05 ஆம் திகதி முற்பகல் 9.00 மணியுடன் நிறைவடையும்.

இதற்கான விண்ணப்பங்களை இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.doenets.lk ஊடாகச் சமர்ப்பிக்க முடியும். இணையத்தளத்திலுள்ள "Our Services" பிரிவின் கீழ் "Online Applications – Recruitment Exams/ E.B. Exams" என்ற தெரிவின் ஊடாக விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.

அரச வர்த்தமானி அறிவித்தலின்படி, விண்ணப்பங்களை இணையவழி முறைமையூடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் ஏனைய முறைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களை பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும். (ஐ)

## ஏகாதிபத்தியம்...

முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

78 ஆவது சுதந்திர தினமான நேற்று கொள்ளுப்பிட்டி, பொல்வத்த சிறீ தர்மகீர்த்தயாராமயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுதந்திர தின வைபவ நிகழ்வில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு

# தோல்வியடைந்து வீட்டில் இருப்பதால் இனவாதத்தை கையில் எடுத்த சுமந்திரன்

## வடக்கு- கிழக்கில் இனவாதத்தை தவிர்க்க வேண்டுமென பிமல் ரத்நாயக்க அறிவுரை

கொழும்பு, பெப். 05

ரணிலின் அரசாங்கத்தில் பதில் பிரதமராக செயல்பட்ட சுமந்திரன், வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு என்ன செய்தார்?. தோல்வியடைந்து தற்போது வீட்டில் இருப்பதால் இனவாதத்தை கையில் எடுத்துள்ளார். இனவாதத்தால் தமிழ், முஸ்லிம் மக்கள் தான் மிக மோசமாக பாதிக்கப்பட்டனர். ஆகவே, இனவாதத்தை கையில் எடுக்காதீர்கள். வடக்கு மற்றும் கிழக்கில் தேசிய மக்கள் சக்திக்கு உள்ள செல்வாக்கை மலினப்படுத்தும் வகையில் அரசாங்கம் செயல்படவில்லை. அபிவிருத்தித் திட்டங்களே மேற்கொள்ளப்படுகின்றன. அதற்கு இனவாதமளிக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் சட்டத் திருத்த ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"நாட்டை வங்குரோத்து நிலைக்குத் தள்ளி, அரசியலில் வங்குரோத்து நிலையடைந்தவர்கள் தற்போது ஏஐ செயலியுடன் தான் மக்கள் சந்திப்புகளை நடத்துகிறார்கள். இனவாதத்தை மாத்திரம் முன்னிலைப்படுத்தி செயல்படும் இரண்டு ஊடகங்கள் அவற்றுக்கு முன்னுரிமை வழங்குகின்றன. போலியான செய்திகளை மாத்திரமே வெளியிடுகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கிவுல் ஓயா திட்டத்தின் ஊடாக சிங்கள குடியேற்றத்தை அமைப்பதாக தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் குறிப்பிடுகிறார்கள். இனவாதமற்ற வகையில் தான் நாங்கள் செயல்படுகிறோம். ஜனாதிபதி வடக்கு, கிழக்கு மற்றும் மலையக அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கியுள்ளார்.

வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் பிரதான தமிழ் மற்றும் முஸ் லிம் அரசியல் கட்சியாக தேசிய மக் கள் சக்தி தான் உள்ளது. ஆகவே, வடக்கு மக்களின் அபிலாஷைகளுக் கும் நம்பிக்கைக்கும் எதிராக நாங்கள் செயல்பட போவதில்லை. வடக்குக்கான அபிவிருத்திகளை துரிதமாக ஆரம்பிப்போம். எதிர்வரும் மாதம் வடக்கு மாகாணத்தில் குடிநீர் திட்டத்தை ஆரம்பித்து வைப்போம்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தேர்தலில் தோல்வியடைந்து தற்போது வீட்டில் இருப்பதால் இனவாதத்தை கையில் எடுத்துள்ளார். ரணிலின் அரசாங்கத்தில் சுமந்திரன் பதில் பிரதமராக செயல்பட்டார். அப்போது வடக்கு மற்றும் கிழக்கு மக்களுக்கு என்ன செய்தார். ஒன்றும் இல்லை. ஆனால், தற்போது இனவாதத்தை முன்னிலைப்படுத்திக் கொண்டு அபிவிருத்தித் திட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார். ஏதேனும் பிரச்னை காணப்படுமாயின் வெளிப்படையாக பேசலாம்.

அதனை தவிர்த்து இனவாதத்தை கையில் எடுக்காதீர்கள். இந்த நாட்டில் இனவாதத்தால் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தான் அதிகளவில் பாதிக்கப்பட்டார்கள். நாட்டு மக்கள் அனைவருக்கும் தான் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்கிறோம் இதற்கு இனவாதம் என்ற உருவத்தை வழங்காதீர்கள்" என்றார்.

(எ)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த அனைவரும் உதவ வேண்டும்

## அமைச்சர் நளிந்த வேண்டுகோள்

கொழும்பு, பெப். 05

நாட்டில் அனைத்து இன மக்களும் சுதந்திரமாக வாழக்கூடிய சூழலை நாம் ஏற்படுத்தியிருக்கின்றோம். எனவே, நாட்டில் பரந்துபட்ட நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு சிவஞானம் சிறீதரன் எம். பி. உள்ளிட்ட அனைவரும் உதவ வேண்டுமே தவிர, அதில் கரும்புள்ளியை ஏற்படுத்தும் வகையில் செயல்படக்கூடாது என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நடைபெற்றது. இதன் போது பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன், சுதந்திர தினத்தை துக்க தினமாக அனுஷ்டிப்பதாக தெரிவித்துள்ளமை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு குறித்து ஊடகவியலாளர்களால் கேட்கப்பட்டது. இந்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய சுதந்திர தினம் என்பது நாட்டிலுள்ள சகல மக்களுக்குமான தினமாகும். இதில் எந்தவித இன, மத, மொழி பேதமும் இல்லை. எனினும், சில அரசியல்வாதிகள் தமது குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக மக்கள் மத்தியில் குழப்பங்களை உருவாக்க முயற்சிக்கின்றனர். சுதந்திர தினத்தில் மக்கள் மத்தியில் ஒற்றுமையை ஏற்படுத்த வேண்டியது அத்தியாவசியமானதாகும்"- என்றார்.

# இலங்கை மக்களுக்கு அமெரிக்கா வாழ்த்து

கொழும்பு, பெப். 05

இலங்கையின் 78ஆவது தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு, இலங்கை மக்களுக்கு அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மார்கோ ரூபியோ வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இந்து - பசுபிக் பிராந்தியத்தில் பொதுவான இலக்குகள் மற்றும் தேவைகளின் அடிப்படையில் இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் மேம்பட்டு வரும் கூட்டாண்மைத் திட்டங்கள் குறித்து அவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் தேசிய தினத்தை கொண்டாடும் இந்த வேளையில், மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவிப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சுதந்திரமான, பாதுகாப்பான மற்றும் வளமான இந்து-பசுபிக் பிராந்தியத்துக்கான பொதுவான அர்ப்பணிப்பின் அடிப்படையில், அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையே பரஸ்பர மரியாதையுடனான உறவு கட்டியெழுப்பப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார்.

ட்ரம்ப் நிர்வாகத்தின் கீழ் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் மேலும் பலமடைந்ததாக சுட்டிக்காட்டிய ரூபியோ, இலங்கையைத் தாக்கிய கடுமையான டித்வா புயலின் பின்னர் அமெரிக்கா வழங்கிய உதவிகளை ஓர் உதாரணமாகக் குறிப்பிட்டுள்ளார்.

டித்வா புயலுக்கு பின்னர் இலங்கை மக்களுக்கு அமெரிக்கா வழங்கிய ஆதரவானது, எமது கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்தியுள்ளதை காட்டுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# ஜனாதிபதி பொதுமன்னிப்பில் 49 கைதிகள் நேற்று விடுதலை

கொழும்பு, பெப். 05

78ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு 49 கைதிகளுக்கு ஜனாதிபதி விசேட பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அரசமைப்பின் 34ஆவது பிரிவின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, சிறைக்கைதிகளுக்கு ஜனாதிபதியின் இந்த விசேட பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப் பேச்சாளரும் சிறைச்சாலைகள் ஆணையாளருமான ஏ. சி. கஜநாயக்க தெரிவித்தார்.

இதற்கமைய, பின்வரும் நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளின் கீழ் கைதிகளுக்கு இந்த விசேட ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்துவரும் கைதிகள் சிறையில் கழித்த ஒவ்வொரு வருடத்துக்கும் ஒரு வார கால பொதுமன்னிப்பு இதன்கீழ் வழங்கப்படுகிறது.

75, 000 ரூபாய்க்கு குறைந்த அபராதத்தை செலுத்த தவறியமையால் சிறைத்தண்டனை அனுபவித்து வரும் கைதிகளின் எஞ்சிய தண்டனை காலத்தை இரத்துச் செய்தல் இந்த ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் இடம்பெறுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# "சிறந்த ஆட்சியை உருவாக்க அர்ப்பணிப்புடன் உள்ளோம்"

கொழும்பு, பெப். 05

அரசாங்கம் என்ற வகையில், வெளித் தரப்பினருக்கு நமது தூய்மையை எடுத்துக் காட்டுவதற்கு முன், நாம் நமக்குப் பொறுப்பாகவும் சிறந்த ஆட்சியை நிலைநிறுத்த அர்ப்பணிப்புடன் செயல்பட வேண்டும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

அதற்காக நிறுவன மட்டத்தில் நமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பொறுப்புகளை முறையாக நிறைவேற்றுவோம் என்று அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

சட்டவிரோத பணப்பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியளிப்பதை தடுப்பதற்கான சர்வதேச தரநிலைகள் குறித்து இலங்கை எதிர்கொள்ளும் மூன்றாவது பரஸ்பர மதிப்பீடு தொடர்பான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நிலவும் சட்ட ரீதியான தடைகள் மற்றும் சட்டங்களை நிறைவேற்றுவதில் உள்ள தாமதங்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்த ஜனாதிபதி, அந்த விடயங்களை தாமதப்படுத்தாமல் தேவையான தொழில்நுட்ப திருத்தங்களை விரைவுபடுத்துமாறு அறிவுறுத்தினார்.

பல அரச நிறுவனங்களில் மனிதவளப் பற்றாக்குறை மதிப்பீட்டுச் செயல்முறைக்குத் தடையாக உள்ளதாகத் தெரியவந்ததோடு, தற்போதுள்ள அதிகாரிகளின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு அவசர நடவடிக்கைகள் எடுக்குமாறும் நிர்வாக தாமதங்களைத் தவிர்க்க, சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் இருந்து ஓய்வு பெற்ற அனுபவம் வாய்ந்த அதிகாரிகளை ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயுமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார். (எ)

# மாணவர்கள் வீதியில் இறங்க எவ்வித பிரச்னையும் இல்லை

## பாடப்புத்தகங்களை நீக்கவோ, நிராகரிக்கவோ இல்லை- பிரதமர்

கொழும்பு, பெப். 05

ஆறாம் தர மாணவர்கள் வீதியில் இறங்குவதற்கு எந்தவித பிரச்னையும் இல்லை. ஏனெனில் அவர்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. நளின் பண்டார தான் வீதிக்கு இறங்க வெட்கப்பட வேண்டும். மக்கள் மத்தியில் தவறான நிலைப்பாட்டை இவர்கள் தான் ஏற்படுத்தினார்கள். இவர்களுக்கு தான் இன்று வீதிக்கு இறங்க முடியாத நிலை உள்ளது. ஆறாம் தரத்துக்கான முதலாம் தவணைக்கான பாடப்புத்தகங்களை நீக்கவோ அல்லது நிராகரிக்கவோ இல்லை என்று கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமர்வின் போது வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையின் போது, பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"6 ஆம் தரத்தின் முதலாம் தவணைக்கான பாடத்தொகுதிகளே அச்சிடப்பட்டுள்ளன. அவற்றுள் எதனையும் நாம் நிராகரிக்கவோ அல்லது நீக்கவோ இல்லை. 6 ஆம் தரத்துக்கான திட்டத்தை 2027 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்த முன்மொழிந்துள்ளோம்.

2027 இல் அதனை நடைமுறைப்படுத்தும்போது அவற்றை பயன்படுத்துவதற்கே நாம் திட்டமிட்டுள்ளோம். அதனை தற்போது நீக்கவோ அல்லது நஷ்டம் ஏற்படும் வகையிலான எந்தவொரு தீர்மானத்தையோ நாம் எடுக்கவில்லை". - என்றார். (எ)

# சட்டமாஅதிபர் பதவியை பெற்றுக்கொள்ள திலீப பீரிஸ் அரசாங்கத்துக்கு அழுத்தம்!

கொழும்பு, பெப். 05

சட்டமா அதிபர் திணைக்களத்தின் மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ் அரசாங்கத்துக்கு சார்பாக செயல்பட்டு, சட்டமா அதிபர் பதவியை பெற்றுக்கொள்வதற்கு முயற்சித்து வருகிறார். அவரது கடந்த கால நடவடிக்கை எங்களுக்கு தெரியும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை தொலைத் தொடர்புகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதி செயலாளர்களில் சமன் ஏக்க நாயக்க கௌரவமான ஒரு செயலாளராவார். அவரது வழக்கு விசாரணையின்போது, அவரை பார்த்து ஊழல் காரர், மோசடிகாரர் என சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிற்றர் ஜெனரல் திலீப பீரிஸ் குற்றம்சாட்டினார். வழக்கு விசாரணைகளின்போது அவ்வாறு யாரையும் குற்றம்சாட்ட சட்டமா அதிபர் திணைக்கள சொலிசிற்றர் ஒருவருக்கு முடியாது.

அத்துடன் இன்னும் 3 மாதங்களில் 3 பேர் கொண்ட விசாரணை குழுவின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்கு விசாரணை மேற்கொள்ளப்படும் என இவர் தெரிவித்தார்.

இதனை தெரிவிப்பதற்கு திலீப பீரிஸுக்கு எப்படி முடியும். பிரதம நீதியரசரே அதனை மேற்கொள்ள வேண்டும். அதனால் பிரதம நீதியரசர், சட்டமா அதிபரின் கடமைகளையும் இவர் கையில் எடுத்துக்கொண்டுள்ளார்."- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.02.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.